இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1998 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (திருத்தச்) சட்டம்

(1998, ஏப்பிறல் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1998, ஏப்பிறல் மாதம் 09 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 2.50**

# 1998 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் 8 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ – ஓ. 59/95.

**1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பட்டயக் கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பட்டயக் கணக்காளர்கள் நிறுவக (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1959 ஆம் ஆண்டின், 23 ஆம் இலக்கப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தின் விரிவுப் பெயர், "அதன் அலுவல்களை முகாமை செய்வதற்கும்" என்னும் சொற்களை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக, "அதன் அலுவல்களை முகாமை செய்வதற்கும், இலங்கைக் கணக்கீட்டு மற்றும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களை வழங்குவதற்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.

3. பின்வரும் புதிய பிரிவு, 3 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 3அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :– முதன்மைச் சட்டவாக்கத்தில் 3அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"நிறுவகத்தின் குறிக்கோள்கள். 3அ. நிறுவகத்தின் குறிக்கோள்கள் பின்வருவன வாதல் வேண்டும் :–

(i) கணக்கியல் கோட்பாட்டையும் செயற்பாட்டையும் பொதுவாக மேம்படுத்தலும் அத்துடன் குறிப்பாகக் கணக்காய்வு, நிதி முகாமை மற்றும் வரியிறுப்பனவு என்பவற்றை மேம்படுத்தலும் ;

(ii) கணக்காய்வு, நிதிமுகாமை மற்றும் வரி இறுப்பனவு ஆகிய கற்கைத்துறைகளைக் கற்க விரும்புகின்ற அல்லது இத்துறையில் தமது திறன்களையும் அறிவையும் முன்னேற்ற விரும்புகின்ற உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், அவர்களுக்குக் கல்வி புகட்டுதல் அத்துடன் பயிற்சி அளித்தல் ;

2- re- 047312 – 1,100 (98/02)

(iii) கணக்காளர்களின் உயர்தொழில் சுதந்திரத்தைப் பேணிக் காத்தலும் அத்துடன் அதன் உறுப்பினர்கள் உயர்தொழிலில் உயர்வான நியமங்களையும் நடத்தையையும் பேணுவதை உறுதி செய்தலும் ;

(iv) தேசிய, பொதுமக்கள்சார், கல்வி அல்லது தர்ம நோக்கங்களுக்காக நன்கொடைகள், உதவுதொகைகளை அளித்தல் ;

(v) பல்கலைக்கழகங்களுக்கு அல்லது வேறு கல்வி நிறுவனங்களுக்கு மானியங்களை வழங்குதல் ;

(vi) நிறுவக உறுப்பினர்களின் அக்கறைகளை மேம்படுத்தும் நோக்கத்துக்காகப் புலமைப் பரிசில்கள் வழங்குதலும், கண்காட்சிகளை நடாத்துதலும் ;

(vii) நிறுவகத்தினதும் வேறு உயர்தொழில் குழுக்களினதும் உறுப்பினர்களுக்கும், அத்துடன் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற வேறு ஆட்களுக்கும் திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு அளிப்புகள் வழங்குவதற்கான செயற்றிட்டங்களை ஒழுங்கமைத்தலும், அவற்றிற்கு நிதியுதவி அளித்தலும் அத்துடன் அவற்றைப் பேணுதலும் ;

(viii) நிறுவகத்தைப் போன்ற அதே குறிக்கோள்களைக் கொண்ட வேறு ஏதேனும் கழகத்துக்கு மானியங்களை அல்லது உதவு தொகைகளை வழங்குதல் ;

(ix) மேற்சொல்லப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு இடைநேர்விளைவான அல்லது உசிதமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்தல்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நிறுவகத்தின் முதுமாணி உறுப்பினர் ஒருவராகப் பேரவையால் பதிவு செய்யப்படுவதற்குத் தகவுடையவரல்லாத நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவர், நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கு அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் ஐந்து ஆண்டுகளைப் பூர்த்திசெய்வதன் மேலும் நிறுவகத்தின் முதுமாணி உறுப்பாண்மையை எய்துவதற்கெனப் பேரவையினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதன் மேலும், பேரவைக்கு விண்ணப்பமொன்று செய்யப்படுவதன் மேலும், அத்துடன் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைப் பேரவைக்கு செலுத்தியதன் மேலும் பேரவையினால் நிறுவகத்தின் முதுமாணி உறுப்பினரொருவராகப் பதிவு செய்யப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும். அத்தகைய உறுப்பினர் நிறுவகத்தின் முதுமாணி உறுப்பினர் ஒருவராகப் பேரவையினால் பதிவு செய்யப்பட்டதன் மேல், அவர் முதுமாணி உறுப்பினர் ஒருவர் எனச் சுட்டிக்காட்டுவதற்காக அவரின் பெயருக்குப் பின்னால் "மு. பா. க." என்னும் சேர்க்கையைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) பேரவையானது இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் தலைவர் ஒருவரையும் உபதலைவர் ஒருவரையும் அத்துடன் பதினான்கு வேறு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் .";

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(அ) அமைச்சரினால் நியமிக்கப்படும் எட்டு உறுப்பினர்கள், இவர்களில் கணக்காளர் தலைமையதிபதி நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்தால், அவர் ஒருவராதல் வேண்டும் என்பதுடன் இன்னொருவராகப் பேரவையின் நேர் முற்போந்த காலத் தலைவர் இருத்தலும் வேண்டும் ;

(ஆ) நிறுவகத்தின் உறுப்பினர்களிடையேயிருந்து நிறுவகத்தின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆறு உறுப்பினர்கள் ; —

(இ) கணக்காளர் தலைமையதிபதி நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இல்லாதிருக்கின்றவிடத்து அல்லது நேர்முற்போந்த காலத் தலைவர் பேரவைக்கான நியமனத்தை ஏற்றுக் கொள்ளாதவிடத்து, அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர்" அத்துடன்

(ஆ) அதன் (ii) ஆம் பந்தியில், "இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இவ்வுட்பிரிவின் (அ) அல்லது (இ) என்னும் பந்தியின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 7அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**6.** பின்வரும் புதிய பிரிவு, 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

*"தலைவர் மற்றும் உபதலைவர் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள்.*

7அ. (1) நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவர், பேரவையின் தலைவர் பதவிக்கு ஒரு தடவைக்கு மேல் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் ஆகாது.

(2) நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவர் –

(அ) நிறுவகத்தின் முதுமாணி ஒருவராக அவர் இருந்தாலன்றி ; அத்துடன்

(ஆ) ஆகக்குறைந்தது பேரவையினால் நியமிக்கப்பட்ட மூன்று குழுக்களில் அவர் சேவையாற்றியிருந்தாலன்றி ; அத்துடன்

(இ) உபதலைவர் பதவிக்கான பெயர் குறித்த நியமனங்களின் இறுதித் தேதிக்கு நேர்முன்னரான ஐந்து வருட காலப்பகுதியின்போது ஆகக் குறைந்தது ஒரு தவணைக்காவது பேரவையின் உறுப்பினர் ஒருவராக இருந்தாலன்றி –

அவர் பேரவையின் உபதலைவராகத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதல் ஆகாது.

(3) இச்சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், பேரவையில் உபதலைவராகப் பதவி வகிக்கின்ற நிறுவனத்தின் உறுப்பினர், பேரவையின் அடுத்த பதவிக்காலம் ஆரம்பமாகும் தேதிக்கு ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்கு முன்னர் நடந்த கூட்டமொன்றின்போது இரகசிய வாக்கெடுப்பின்மூலம் அதற்குச் சாதகமாக வாக்களிக்கும் (சமுகமளிக்காதவர்கள் உட்பட) பேரவையின் உறுப்பினர்களின் நான்கில் மூன்று பங்கிற்குக் குறையாதவர்களின் பெரும்பான்மை கொண்டு பேரவை முரணாகத் தீர்மானித்தால் ஒழிய, நிறுவகத்தின் உறுப்பினர்களால், பேரவையின் அடுத்த பதவிக்காலப் பகுதிக்குப் பின், பேரவையின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டவராகக் கருதப்படுதல் வேண்டும். பேரவையானது அவ்வாறு தீர்மானிக்கின்றவிடத்து அல்லது பேரவையின் உபதலைவராகப் பதவி வகிக்கின்ற நிறுவகத்தின் உறுப்பினர் பேரவையில் அடுத்த பதவிக்காலப் பகுதிக்குப் பேரவையின்

தலைவராகப் பதவியேற்க இயலாதவராக அல்லது விருப்பமற்றவராக இருக்கின்ற விடத்து, நிறுவகத்தின் உறுப்பினர்கள், தமக் கிடையேயிருந்து தலைவர் ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும். ஆயின் எவ்வாறாயினும், அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் (2) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அத்துடன் (இ) என்னும் பந்திகளில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள உறுப்பினர் ஒருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் பேரவையின் தலைவராகப் பதவி வகிக்கின்ற உறுப்பினராக இருத்தலும் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(3அ) பேரவையின் அனுமதியின்றிப் பேரவையின் அடுத்துவரும் மூன்று கூட்டங்களுக்குச் சமுகமளிக்கத் தவறுகின்ற பேரவையின் உறுப்பினர் ஒருவர், அத்தகைய கூட்டங்களின் இறுதித் திகதியிலிருந்து பயனுறுமாறு தமது பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது அப்பிரிவின் (ஓ) எனும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது :-

"(ஔ) இலங்கைக் கணக்கீட்டு மற்றும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களை வழங்குதல் ;

(க) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப் பில்லாமல் பணங்களைக் கடன் வாங்குதல் அல்லது திரட்டுதல் ;

(ங) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்தல், குத்தகைக்கு எடுத்தல், வாடகைக்கு எடுத்தல் அல்லது வேறு வகையில் கொள்ளுதலும் அத்துடன் அத்தகைய ஆதனம் எதனையும் விற்றல், ஈடுவைத்தல், குத்த கைக்குவிடல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ச) நிறுவகத்தின் பயன்பாட்டிற்கு அவசியமான ஏதேனும் கட்டடங்களை அமைத்தல், மாற்றுதல், பராமரித்தல் அத்துடன் அவற்றிற்கு உபகரணமிடுதல் ;

(ஞ) நிறுவகத்தின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் அத்துடன் அவர்களில் தங்கிவாழுபவர்களுக்கும் ஊதியம், படி, ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் என்பவற்றை வழங்குதல் ;

(ட) நிறுவகத்திற்கு ஏதேனும் சேவைகளை நல்கிய பேரவை உறுப்பினர்களுக்கும் வேறு எவரேனும் ஆட்களுக்கும் செலவுகளைச் செலுத்துதல் ; அத்துடன்

(ண) நிறுவகத்தின் குறிக்கோள்களைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களை அல்லது காரியங்களைச் செய்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"(2) (அ) பேரவையானது, அதற்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டின்மீது அல்லது வேறுவகையாக நிறுவகத்தின் உறுப்பினராக இருக்கின்ற எவரேனும் ஆள் உயர்தொழில் துர்நடத்தைக்குக் குற்றவாளியாக உள்ளார் என நம்புவதற்கு நியாயமான காரணம் இருக்கின்ற விடத்து, அத்தகைய உறுப்பினருக்கெதிராக உயர்தொழில் துர்நடத்தை பற்றிய முதற்தோற்றவளவிலான வழக்கொன்று இருக்கின்றதாவென விசாரணை செய்து பேரவைக்கு அறிக்கையிடுவதற்கெனப் புலனாய்வுக் குழுவொன்றை நியமிக்கலாம்.

(ஆ) உறுப்பினர் ஒருவருக்கெதிராக உயர்தொழில் துர்நடத்தை பற்றிய முதற்தோற்றவளவிலான வழக்கொன்று இருக்கின்றதெனப் பேரவைக்கு (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட புலனாய்வுக்குழுவொன்று அறிக்கையிடுகின்றவிடத்து, அத்தகைய உறுப்பினரின் நடத்தை பற்றி விசாரணை செய்யும் நோக்கத்திற்காகப் பேரவையானது ஒழுக்காற்றுக்குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது "அந்தத் தத்துவத்தைப் பிரயோகிப்பதற்குப் பதிலாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அந்தத் தத்துவத்தைப் பிரயோகிப்பதற்குப் பதிலாக அவ்வாளுக்கு எச்சரிக்கை செய்யலாம் அல்லது அவ்வாளைக் கண்டிக்கலாம் அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "வேறு எவரேனும் ஆளுடன் பங்காண்மையாகவோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேறு எவரேனும் ஆளுடன் பங்காண்மையாகவோ அல்லது கம்பெனி ஒன்றின் பணிப்பாளராகவோ" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "கணக்கீட்டு நடைமுறை அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கணக்கீட்டு நடைமுறை அல்லது கம்பெனி வரி இறுப்பனவு அல்லது வியாபாரக் கருமங்கள் அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை அவ்வட்டவணையின் 4 ஆம் பந்தியின் (10) ஆம் உட்பந்தியில் "தயாரித்து அனுப்பிவைத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "தயாரித்து அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், எவ்வாளின் நடத்தை விசாரணையின் விடயப் பொருளாக உள்ளதோ அவ்வாளுக்கு அத்தகைய அறிக்கையின் பிரதி ஒன்றை அனுப்பிவைத்தலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**13.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.